உ

" தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவர்
தண்தமிழ் காப்பது நம் கடன் அன்றோ. "

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(அங்கீகரிக்கப்பெற்ற தர்ம தாபனம்)

# 28 ஆம் ஆண்டறிக்கை

" செல்வர்க்கழகு தம் சமூகத்தைப் பேணுதல் "

சங்கப் பணி மனை,
தொலைபேசி - 83759.

இல. 7, 57ஆம் ஒழுங்கை,
உருத்திரா வீதி.
கொழும்பு-6.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 1970 ஆம் ஆண்டுக்குரிய காப்பாளர்களும் ஆட்சிக்குழு உறுப்பினரும்.

**காப்பாளர்:** திரு. இ. சபாநாயகம்

**துணைக்காப்பாளர்கள்:**

1. திரு க. ச. அருள்நந்தி
2. ,, ஆர். எம். பழனியப்பாச் செட்டியார்
3. ,, வே. க. கந்தசுவாமி
4. ,, செ. நடராசா
5. ,, சோ. நடேசன், கியூ. சீ.
6. ,, மருத்துவகலாநிதி த. நல்லைநாதன்
7. ,, கே. சி. தங்கராசா
8. ,, கௌரவ வீ. சிவசுப்பிரமணியம்
9. ,, பீ. ஆர். சாமுவேல்
10. ,, சௌ. தொண்டமான்
11. ,, ஜே. ஆர். சின்னத்தம்பி
12. ,, யே. ம. இராசரத்தினம்
13. ,, கா. பொ. இரத்தினம், பா. உ.
14. ,, யேம்ஸ் தே. இரத்தினம்
15. ,, சி· சின்னத்துரை

**தலைவர்;** திரு. கு. பாலசிங்கம்

**துணைத் தலைவர்கள்:**

1. திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை
2. ,, மு. வயிரவப்பிள்ளை
3. ,, இ. பொ. செல்லையா
4. ,, வ. அருளம்பலம்
5. ,, பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம்
6. ,, ப. நவரத்தினராசா, கியூ. சீ.
7. ,, சி. இரங்கநாதன், கியூ. சீ.
8. ,, கா. ஆ. தவத்துரை
9. ,, வே. கணபதிப்பிள்ளை
10. ,, சி. ஆ. கந்தையா
11. ,, சோ. நடராசா
12. ,, இ. நமசிவாயம்
13. ,, க. செ. நடராசா
14. ,, ஜனாப். எஸ். எம். கமால்தீன்
15. ,, இ. பாஸ்கரலிங்கம்
16. ,, இ. சி. சோதிநாதன்

**பொதுச்செயலாளர்:** திரு. ச. சரவணமுத்து

**பொருளாளர்:** திரு. வை. பொன்னுச்சாமி

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 28ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டம் (31-12-70)

திருவள்ளுவராண்டு 2001 மார்கழி 12 (27-12-69) தொடக்கம் 2002, மார்கழி 16 (31-12-70) வரையுள்ள காலம்.

**ஆட்சிக் குழுக் கூட்டம்:**

27–12-69 தொடக்கம் 31-12-70 வரையுள்ள இக்காலத்தில் 9 ஆட்சிக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

**உறுப்பினர் நிலை:**

இவ்வாண்டு சேர்க்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை;

| | | |
|---|---|---|
| ஆயுள் உறுப்பினர் | — | 5 |
| சாதாரண உறுப்பினர் | — | 17 |

இப்பொழுதுள்ள உறுப்பினரின் மொத்த எண்ணிக்கை;

| | | |
|---|---|---|
| ஆயுள் உறுப்பினர் | — | 86 |
| சாதாரண உறுப்பினர் | — | 232 |

**விழாக்கள், பொதுக் கூட்டம் முதலியன:**

(1) “ மகப் பேற்று மருத்துவம் ” எனும் சிறந்த மருத்துவ நூலை எழுதி வெளியிட்ட பேராசிரியர் மருத்துவ கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்களைப் பாராட்டு முகமாக 15-2-70 அன்று மாலை 6 மணிவரையில் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. கு. பாலசிங்கம் தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தப் பெற்றது. திருவாட்டி விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை இசைவிருந்தளித்தார்கள். பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், ஜனாப் எ. எம். எ. அஸீஸ், மருத்துவ கலாநிதி த. குமாரசுவாமி, கலாநிதி சு. வித்தியானந்தன், திரு. கி லக்ஷ்மணன், திரு. அ. வி. மயில்வாகனம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். ஈற்றில் நூலாசிரியர் சின்னத்தம்பி அவர்கள் பாராட்டுரை வழங்கியோருக்கும் தமிழ்ச் சங்கத்திற்கும் நன்றி தெரிவித்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

(2) தமிழகத்தின் பிரபல முசிலிம் எழுத்தாளரும் கவிஞருமாகிய அல்ஹாஜ் ஜீ. எம். எஸ். சிராஜ் பாக்கவி அவர்கள் ஈழநாட்டைத் தரிசித்த காலை அவர்களைப் பாராட்டு முகமாக 7-7-70 மாலை 5-30 மணி வரையில் பம்பலப்பிட்டி கிறீன்லன்ஸ் விடுதியகத்தில் ஒரு சிற்றுண்டி விருந்தளிக்கப்பட்டது. சங்கத் தலைவர் திரு. கு, பாலசிங்கம். திரு. சோ. நடராசா. திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, திரு. மு. வயிரவப்பிள்ளை, ஜனாப் எச். எம். பி. மொஹிதீன், திரு. க. செ. நடராசா ஆகியோர் சிராஜ் பாக்கவி அவர்களைப் பாராட்டிப் பேசினர். சிற்றுண்டி விருந்தளித்துத் தம்மைக் கௌரவித்தமைக்காக நன்றி தெரிவித்த பாக்கவி அவர்கள் தமிழ் மொழியின் தொன்மை பற்றியும் அதன் சிறப்புப் பற்றியும் சுவைபடப் பேசினார்கள்.

(3) பாரிஸ் நகரில் நடைபெற்ற மூன்றாவது தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு இலங்கையிலிருந்து சென்ற கலாநிதி எச். டபிள்யு. தம்பையா, கலாநிதி சு. வித்தியானந்தன், கலாநிதி க. கைலாசபதி, ஜனாப் எஸ். எம். கமால்தீன், திரு. யேம்ஸ், தே. இரத்தினம் ஆகியோரைப் பாராட்டு முகமாக 18-8-70 மாலை 5-30 மணி வரையில் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் ஒரு சிற்றுண்டி விருந்தளிக்கப்பட்டது. விருந்தின்பின் நடைபெற்ற கூட்டத்திற்கு திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கி, பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார்கள், அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர் கௌரவ செ. குமாரசூரியர் அவர்கள் சங்கத்தின் அழைப்பை ஏற்றுவந்து சிறப்புரை வழங்கினார்கள். திரு. மு. வயிரவப்பிள்ளை, திரு. கி. லக்ஷ்மணன், திரு. க. செ. நடராசா ஆகியோரும் பாராட்டுரை வழங்கியபின், கலாநிதி தம்பையா, கலாநிதி வித்தியானந்தன். கலாநிதி கைலாசபதி, ஜனாப் கமால்தீன் ஆகியோர் மகாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றிய தம் கருத்துக்களைக் கூறினர்.

(4) கலைமகள் ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் "இலக்கிய இன்பம்" எனும் பொருள்பற்றி வெள்ளவத்தை இராமக் கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 20-11.70 மாலை 7 மணி தொடக்கம் அரியதோர் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சங்கத்தலைவர் திரு. கு. பாலசிங்கம் தலைமை வகித்தார்கள். திரு. க. செ. நடராசா நன்றி கூறினார்கள். "கீதை அமுதம்" என்ற தன் நூல் வெளியீட்டு விழாவிற்கு வித்துவான் ஜகந்நாதனைப் பெரும் சிரமப்பட்டு அழைத்த திரு. செ. தனபாலசிங்கன் தமிழ்ச்சங்க ஆதரவில் ஜெகந்நாதன் அவர்கள் பேசுவதற்கு ஒழுங்கு செய்தமைக்காக அவருக்குச் சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.



**நூல் நிலையமும் படிப்பகமும்.**

நூல் நிலையத்திற்கு இந்த ஆண்டு ரூபா 380]. பெறுமதியான நூல்கள் வாங்கப்பட்டன. "ஈழநாடு" பத்திரிகையும் இப்பொழுது வாங்கப்படுகிறது. பிரித்தானிய, அமெரிக்க, இரசிய, இந்தியத் தூதரகத்தினர் தமது சஞ்சிகைகளைத் தொடர்ந்து சங்கத்திற்கு அனுப்பி வருகின்றனர், இவர்கள் யாவருக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

நூல் நிலையத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை முந்திய ஆண்டிலும் பார்க்கக் கூடியிருப்பினும் இந்த எண்ணிக்கை மிகக் குறைவாகவேயிருக்கிறது. சில ஆராய்ச்சியாளர்களுக்கும் தமிழ்க்கல்வி ஆர்வமுள்ளவர்களுக்கும் இந்நூல் நிலையம் பயனளித்துவருகிறது. நூல் நிலையத்தை மேலும் விரிவடையச் செய்யவும் அதனைப் பயன்படுத்துவோருக்குப் போதிய வசதிகளை ஏற்பாடு செய்யவும் இப்பொழுதுள்ள இடவசதி போதாமலிருக்கிறது. பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் சங்க உறுப்பினர் வாசிப்பதற்கு வைக்கக்கூடிய ஒரு வாசிகசாலை ஒழுங்கு செய்வதற்கே இடமில்லாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ் வகுப்புக்கள்.**

புலவர் சிவங், கருணாலய பாண்டியனார் அவர்கள் தொடர்ந்து தமிழ் இலக்கண இலக்கிய வகுப்புகளை நடத்தி வருகிறார்கள் தொல்காப்பியம், சிவஞான பாடியம் முதலிய சில நூல்கள் படிப்பிக்கப்படும் இவ்வகுப்புகளில் பள்ளிப்பராயத்தைத் தாண்டிய சிலர் மாத்திரம் பாடம் கேட்டு வருகிறார்கள். தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகச்சிறந்த அறிவு பெற்றுள்ள இப்பேரறிஞரிடம் பாடம் கேட்டல் கிடைத்தற்கரிய பேறாகும்; எனினும் இவ்வகுப்புக்களிற் சேர்ந்து படிப்போர் எண்ணிக்கை மிகக் குறைவாகவேயிருக்கிறது.

**தமிழ் மூல விஞ்ஞான பாட வகுப்புகள்:**

1970ஆம் ஆண்டு திசம்பரில் நடைபெறும் கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண நிலை) பரீட்சைக்கும், 1971 சனவரியில் நடைபெறும் கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர்நிலை) பரீட்சைக்குமுரிய தமிழ் மூல விஞ்ஞான பாடங்களிலும், தமிழ், சமயம், ஆங்கிலம், எண்கணிதம் ஆகிய பாடங்களிலும் மீட்டல் வகுப்புகள் சங்கப் பணிமனையில் நடைபெற்று வந்தன. இவ்

வகுப்புகளைத் திறம்பட நடத்திய ஆசிரியர்களுக்குச் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இளைப்பாறிய பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் தமிழ் மூலம் பௌதிகவியற் பரீட்சைக்குத் தோற்றும் உயர்நிலை மாணவர்களுக்குத் தன்னாலியன்ற உதவி செய்ய வேண்டுமெனக் கருதித் தானாகவே முன்வந்து பௌதிகவியலிற் சில பிரிவுகளை விளக்கியும் விடையெழுதும் முறைகளைச் சொல்லியும் மாணவருக்கு நல்லூக்கமளித்தனர், அவருக்குச் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

**தமிழ்மொழி உரிமைக்கான நடவடிக்கைகள்:**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குநர் சபையில் தமிழ் உறுப்பினர் ஒருவரையும் நியமிக்க வேண்டுமென அரசாங்கத்தைச் சங்கம் வேண்டிக்கொண்டது. அந்த வேண்டுகோளை அரசாங்கம் கவனிப்பதாகக் கூறியபோதும் இன்னும் அவ்வாறு செய்வதற்கு எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

தமிழ்ச் சஞ்சிகைகள். பத்திரிகைகள், நூல்கள் இந்தியாவிலிருந்து வருவதைத் தடைசெய்யக்கூடாதெனவும், பிற மொழி வெளியீடுகளுக்கில்லாத கட்டுப்பாடு தமிழ் மொழி வெளியீடுகளுக்கு மாத்திரம் விதிக்கப்படக்கூடாது எனவும் சங்கம் அரசாங்கத்தை வேண்டிக்கொண்டது. வரவிருக்கும் புதிய அரசியலமைப்பில் தமிழ் மொழிக்கு அளிக்கப்படவேண்டிய இடம், அது தொடர்பான விவரங்கள் ஆதியனவற்றைக்கொண்ட ஒரு விஞ்ஞாபனத்தைச் சங்கம் அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளது.

**புதிய கட்டடம்:**

சங்கத்திற்குப் புதிதாக அமைக்கத் திட்டமிட்டுள்ள விசாலமான கட்டடத்தின் முதற் கட்டமாகிய முன் பகுதியைக் கட்டத் தீர்மானித்து அதற்காகிய அத்திவாரம் 5-9-70 பிற்பகல் 5-30 வரையில் இடப்பட்டது, இந்த வைபவத்திற்குப் பெருந்தொகையான உறுப்பினரும் மற்றும் ஆதரவாளர்களும் வந்து வைபவத்திற் பங்கெடுத்துக்கொண்டனர். கட்டடக் கலைஞர் திரு. வீ. எஸ். துரைராசா அவர்கள் இக்கட்டடம் சிறந்த முறையில் அமைய வேண்டுமெனக் கருதிப் பெரும் சிரத்தையெடுத்து வருகிறார்கள். இக்கட்டட அமைப்புப் பணியில் சங்க உறுப்பினர். தமிழ் அபிமானிகள் ஆகிய யாவரதும் ஒத்துழைப்பும் உதவியும் பெரிதும் வேண்டப்படுகிறது.



சங்கப் பணிமனையிற் பின் புறமாகவுள்ள பகுதியைச் சைவ மங்கையர் வித்தியாலய ஆசிரியை ஒருவருக்குத் தற்காலிகமாக, சைவ மங்கையர் வித்தியாலய அதிபரின் வேண்டுகோளின் பேரிலும் சங்கம் வேண்டும்பொழுது விட்டுவிடுவர் என்ற அவருடைய உறுதியுரையை நம்பியும், 6 ஆண்டுகளுக்கு முன் கொடுக்கப்பட்டது. 2½ ஆண்டுகளுக்கு முன், புதுக்கட்டடம் அமைப்பதற்காக இடத்தை விட்டு விலகிவிடுமாறு கேட்கப்பட்டபோதும் அவர் இன்னும் விடவில்லை. அது மாத்திரமன்றி, தான் வாடகை கொடுத்திருப்பவர் எனத் தீர்க்குமாறு வாடகைக் கட்டுப்பாட்டுச் சபைக்கு விண்ணப்பம் செய்திருப்பதுடன், தான் வசிக்கும் பகுதியில் சங்கம் எவ்வித கட்டடமும் கட்டக்கூடாது எனத் தடைக்கட்டளை பிறப்பிக்குமாறு நீதி மன்றத்தில் ஒரு வழக்கையும் தாக்கல் செய்துள்ளார். எனினும் அவர் வசிக்கும் பகுதியிலல்லாது வளவின் முற் பகுதியிலேயே இப்பொழுது புதுக் கட்டடத்தின் முதற் கட்டடம் அமைக்கப்படுகிறது.

**57 ஆம் ஒழுங்கை.**

சங்கப் பணிமனையிருக்கும் 57 ஆம் ஒழுங்கையை அகலமாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி இன்னும் கைகூடவில்லை. இதனைச் செய்து தருமாறு மாநகரசபையைச் சங்கம் தொடர்ந்து கேட்டு வருகிறது.

**நன்றி.**

இவ்வாண்டு சங்கம் மேற்கொண்ட பணிகளைச் செய்து முடிப்பதற்குப் பல்லாற்றாலும் உறுதுணையும் ஒத்தாசையும் அளித்த சங்க உறுப்பினர்க்கும், சங்கத்தின் முயற்சிகளில் நேர்முகமாகவும் வேறு முறையிலும் கலந்து பணி புரிந்த ஏனைய அன்பர்க்கும், சங்க விழாக்களையும் கூட்டங்களையும் நடத்துவதற்குச் சரசுவதி மண்டபத்தை தந்துதவிய இந்துக் கல்விச் சபையினர்க்கும் இராமக் கிருஷ்ண மண்டபத்தைத் தந்துதவிய இராமக்கிருஷ்ண மிஷன் சுவாமி அவர்களுக்கும், சிறந்த முறையில் இலக்கண இலக்கிய வகுப்புகளை நடத்திவரும் புலவர் சிவங். கருணாலய பாண்டியனார் அவர்களுக்கும், தமிழ் மூல விஞ்ஞான பாட மீட்டல் வகுப்புகளையும் ஆங்கில தமிழ் சமய வகுப்புகளையும் திறம்பட நடத்திவந்த ஆசிரியர்களுக்கும், சங்கத்தின், கூட்டங்கள், விழாக்கள் ஆகியனபற்றிய செய்திக

ளைத் தம் இதழ்களில் வெளியிட்டுச் சங்கத்திற்கு ஊக்கமளித்த செய்தி இதழ் ஆசிரியர்களுக்கும் சங்க ஆட்சிக் குழு தன் உளம், கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழினம்!!**

| | |
|---|---|
| 7, 57ஆம் ஒழுங்கை, | ச. சரவணமுத்து |
| உருத்திரா வீதி, | கௌரவ பொதுச் செயலாளர் |
| கொழும்பு-6, 20-12-70. | ஆட்சிக் குழுவிற்காக. |

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் (வரைவுளது) வெள்ளவத்தை.

## 1959 திசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்குரிய கணக்கு.

| செலவு | | வரவு | |
|---|---|---|---|
| செய்தித் தாள்கள் | 62-50 | உறுப்பினர் சந்தாப் பணம் | 697-50 |
| மின்சாரம் | 288-24 | நன்கொடைகள் - கட்டிடநிதி | 21, 443-50 |
| அச்சுக் கூலி, கடதாசி முதலியன | 509·00 | பலவித வருமானம் | 179-45 |
| தொலை பேசி, தபால் செலவுகள் | 293-00 | இலங்கை வங்கி அஞ்சலக சேமிப்பு வங்கி வட்டி | 193-96 |
| மாநகரசபை வரி | 379-51 | | |
| விழாக்களும், கூட்டங்களும் | 1011-95 | | |
| கட்டிடப் பராமரிப்பு செலவு | 131-20 | | |
| சந்தா சேகரிப்பவர் கழிவு | 88-50 | | |
| கணக்கியற் செலவு | 50-00 | | |
| போக்குவரவு, நானாவித செலவுகள் | 220-85 | | |
| செலவு போக எஞ்சிய வருமானம் | 19.479-66 | | |
| | 22,514-41 | | 22,514-41 |

## 1969, திசம்பர் 31ல் உள்ளபடியான ஐந்தொகைக் கணக்கு

### பொறுப்பு

| | | |
|---|---|---|
| **மூல தனக் கணக்கு** | | |
| சென்றஆண்டு ஐ.தொ.கணக்கின் படி | 55,628-49 | |
| கூட்டி,நடப்புஆண்டு நிகர்வருமானம் | 19,479-66 | 75,108.15 |
| **நூல் நிலைய வைப்புப் பணம்** | | |
| சென்ற ஆண்டு ஐ.தொ. கணக்கின்படி | 80-00 | |
| கூட்டி நடப்பு ஆண்டு வைப்புகள் | 30·00 | 110-00 |
| | | 75,218-15 |

### இருப்பு

| | | |
|---|---|---|
| **காணியும் கட்டிடங்களும்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | 29,850-13 | |
| நடப்பு ஆண்டு செலவுகள் | 2,489-67 | 32,339-80 |
| **தளபாடங்கள் முதலியன** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | 3,995-80 | |
| நடப்பு ஆண்டு கொள்வனவு | 1,252-83 | 5,248-63 |
| **காற்றுடி** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 500 00 |
| **புத்தகங்கள்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | 1575-17 | |
| நடப்பு ஆண்டுக் கொள்வனவு | 438-89 | 2,014-06 |
| **மலர்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 246·70 |
| **மின்சாரம்** | | |
| வைப்பு—சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 100·00 |
| **கடன் வருமதி** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 197-85 |
| **காசு** | | |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் | 7 086-27 | |
| ,, ,, சேமிப்புக் கணக்கில் | 6 162-14 | |
| ,, தவணை வைப்புக் கணக்கில் | 20,000-00 | |
| அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கில் | 170-77 | |
| கையிருப்பு | 1,151-93 | 34,571-11 |
| | | 75,218-15 |

எமது இன்றைய தேதிய அறிக்கைக்கு அமைவாகச் சரியென உறுதிப் படுத்துகிறோம்.

கொழும்பு, 1970, திசம்பர் 15ம் திகதி.

ஜி. இராசதுரை (ஒப்பம்)
சாட்டேட் கணக்காளர்.

மேற்கூறிய கணக்கு விபரம் சரியென உறுதிப்படுத்துகிறேன்.

வை. பொன்னுச்சாமி (ஒப்பம்)
கௌரவ பொருளாளர்.

# ஆயுள் உறுப்பினர்

திரு. க. ச. அருள்நந்தி
,, மு. வயிரவப்பிள்ளை
வைத்தியகலாநிதி ந. நல்லைநாதன்
திரு. ப. நவரத்தினராசா கியூ. சீ.
,, இ. சபாநாயகம்
,, S. நாகரத்தினம்
,, கோ. ஆழ்வாப்பிள்ளை
,, A. கணபதிப்பிள்ளை
,, V. நடராசா
,, S. சிவசுப்பிரமணியம்
திருமதி P. இராசேந்திரா
திருமதி T. நடராசா
திரு M. நமசிவாயம்
,, M. கனகரத்தினம்
,, வே. இ. வேலாயுதபிள்ளை
,, P. இராமநாதன்
,, M. A. கிருஷ்ணமூர்த்தி
வைத்தியகலாநிதி மு. இரத்தினபாலசூரியர்
திரு. K. P. நடராசா
திருமதி A. தாமோதரம்பிள்ளை
திரு. J. தியாகராசா
,, பொ. நரேந்திரநாதன்
,, T. இரத்தினராசா
,, அ. சுப்பிரமணியம்
,, S. பொன்னையாபிள்ளை
,, வே. முருகேசு
,, K. இராமலிங்கம்
,, M. வைத்திலிங்கம்
,, செ. நடராசா
மதராஸ் பழையகாட் கொம்பனி
ஏ. வி. ஆர். ஏ. லிமிரெட்
திரு. C. இராசையா
சுந்தரம்ஸ், லிமிரெட்
திரு. M. வயிரமுத்து
,, P. சங்கரப்பிள்ளை
,, S U. சோமசேகரம்
பண்டிதர் கா. பொ. இரத்தினம் (பா. உ.)
திரு. இ. நமசிவாயம்
,, சு. நாகரத்தினம்
,, C. இரங்கநாதன் கியூ. சீ.
,, M. கனகரத்தினம்
,, ப. கதிரவேலு ஆச்சாரி

N. வைத்திலிங்கம் அன் கொம்பனி
திரு. யோன் செல்லப்பா
வேலவர் பழையகாட் கொ. லிமிட்
திரு. M. பஸ்தியன்
,, S. நடேசன் கியூ. சீ.
,, சி. அம்பலவாணர்
,, K. பரராசசிங்கம்
,, K. சிவகுருநாதர்
,, K. நேசையா
,, A. அமிர்தானந்தம்
,, ஆ. நடராசா
,, S. பொன்னம்பலம்
A. சுப்பையா அன் சன்ஸ்
திரு. S. சுப்பிரமணியம்
,, V. செல்வநாயகம்
கலாநிதி ஜி. விக்கினராசா
திரு. M. C. நடராசா
,, S. A. செல்வராசா
வண. பிதா X. S. தனிநாயகம்
திரு. R. M. பழனியப்பா செட்டியார்
S. V. பொன்னம்பலம் அன் சன்ஸ்
திரு. V. கனகசபாபதி
வைத்தியகலாநிதி K. சோமசுந்தரம்
திரு. P. இராசரத்தினம்
,, இ. பொ. செல்லையா
,, P. R. சாமுவேல்
,, சோ. நடராசா
,, யே. ம. இராசரத்தினம்
,, C. J. எலியேசர்
,, M. S. இராமையாபிள்ளை
,, இ. புவனேந்திரன்
,, கு. பாலசிங்கம்
,, M. A. கிஸார்
திருமதி ம. பாலகிருஷ்ணன்
திரு. J. R. சின்னத்தம்பி
,, இ. சண்முகம்
,, க. நாகலிங்கம்
கௌரவ வீ. சிவசுப்பிரமணியம்
திருமதி த. திருநாவுக்கரசு
திரு. யேம்ஸ் T. இரத்தினம்
,, ஐ. குமாரசுவாமி
,, வே. க. கந்தசுவாமி
திருமதி தி. ஸ்ரோங்
பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம்

குழு உறுப்பினர்:

1. திரு. கா. கா. இரத்தினம்
2. ,, ச. இ. அப்புத்துரை
3. ,, செ. வேலாயுதபிள்ளை
4. ,, வே. வல்லிபுரம்
5. ,, த. கனகரத்தினம்
6. ,, க. சண்முகரத்தினம்
7. ,, வே. இராசமாணிக்கம்
8. ,, கி. லக்ஷ்மணன்
9. ,, பெ. கணபதிப்பிள்ளை
10. ,, ஐ. குமாரசுவாமி
11. திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன்
12. திருமதி தர்மவதி திருநாவுக்கரசு
13. திரு. எஸ். தொம்மானுப்பிள்ளை
14. ,, க. குமாரசிங்கம் (துணைப்பொருளாளர்)
15. ,, சு. க. ச. பொன்னுத்துரை (இல்லச் செயலாளர்)
16. ,, செ. நடராசா (துணைப் பொதுச் செயலாளர்)
17. ,, தி. சி. கணேசலிங்கம் (உறுப்புரிமைச் செயலாளர்)
18. ,, க. கந்தசுவாமி (நூல் நிலையப் பொறுப்பாளர்)
19. ,, இ. இரத்தினம்
20. ,, த. நடேசுவரன்
21. ,, கு. பூரணானந்தா
22. ,, நா. சுப்பிரமணியன்
23. ,, இ. அம்பிகைபாகன் (இலக்கியக் குழுச் செயலாளர்)
24. ,, பெ. கணநாதபிள்ளை
25. ,, வ. நடராசா
26. ,, வ. மு. தியாகராசா (கட்டடக் குழுச் செயலாளர்)
27. ,, மு. க. நடராசா
28. ,, செ. குமாரசுவாமி
29. ,, த. சுப்பிரமணியம்
30. ,, க. சி. குலரத்தினம்

கௌரவ கணக்காய்வாளர்:

திரு. சே. க. சண்முகம்பிள்ளை
திரு. சி. பாலசுந்தரம்

பிரசித்த கணக்காய்வாளர்:

திரு. ஜீ. இராசதுரை

ராஜா அச்சகம், பாமன்கடை.